பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

கரி: 19 ஐப்பசி 24 ஜுல்ஹு: 26 இதழ் 270
யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-11-77

'அத்த' பத்திரிகை செய்தி:

# இரகசிய பேச்சு பற்றி அமிர் மறுப்பு!

(கொழும்பு)

''தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்குமிடையே எந்தவிதமான இரகசிய ஒப்பந்தங்களும் கிடையாது. இதுபோல தமிழர் விடுதலைக்கூட்டணியினர் சில விஷயங்களில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று பிரதமர் எம்மைப் பணிக்கவுமில்லை'' என்று த. வி. கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பிரிவினைக் கோரிக்கையைச் சிலகாலம்வரை ஒத்திவைத்துவிட்டு, அரசின் முற்போக்குத் திட்டங்களுக்கு ஆதரவு நல்க வேண்டுமென்று பிரதமர் ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்குமிடையே எந்தவிதமான இரகசியப் பேச்சுவார்த்தைகளும்இடம்பெறவில்லை' என்றும் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 4-ம் திகதி வெளியான 'அத்த' (சிங்கள) பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாக மறுப்புத் தெரிவிக்கையிலேயே திரு அமிர்தலிங்கம் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

தமது மறுப்பு அறிக்கையில் திரு. அமிர்தலிங்கம் மேலும் தெரிவிப்பதாவது:

''இச்சந்திப்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள ஒரு வீடொன்றில் நிகழ்ந்துள்ளதாக பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''கொள்ளுப்பிட்டியிலுள்ள எழுது வினைஞர் கட்டடத்தில் நடவடிக்கைக்குழு கூடியது. இக்கூட்டத்தையே பத்திரிகைச் செய்தியில்குறிப்பிட்டிருப்பதாக நான் நம்புகிறேன்.

'இக்கூட்டத்தில், தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கவேண்டுமென முன்னாள் செனட்டர் திரு. சு. நடராசா உட்பட சிலர் வற்புறுத்தியிருந்தனர். நடவடிக்கைக் குழுவின் தீர்மானப்படியே நாம் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதில்லை என்று முடிவு செய்திருந்தோம் இக்கூட்டத்தில் எவரும் வெளிநடப்புச் செய்யவில்லை,

(6-ம் பக்கம் பார்க்க)

மத்தியகிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு:

# இலங்கைபெண்களுக்கு அனுமதி மறுக்கப்படும்!

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்று இலங்கைப் பெண்கள் அங்கு செல்வது தடைசெய்யப்படும்!

வேலை வாய்ப்புப்பெற்று மத்தியகிழக்குநாடுகள்செல்லும் இலங்கைப் பெண்கள் அங்கு பலவிதமான இன்னல்களுக்கு ஆளாக்கப்படுவதாக வெளிவந்த புகார்களைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் இருந்து செல்லும் பெண்கள் கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர்கள் என்று கிடைத்த தகவலைத் தொடர்ந்து தொழில் அமைச்சர் உடன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தொழில் அமைச்சர் காப்டன் செனிவரத்தின, இதுசம்பந்தமாக வெளிநாடு ஏஜன்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மத்திய கிழக்கில், கூடுமான வரை இளைஞர்களுக்கே வேலைவாய்ப்பு அளிக்குமாறு அமைச்சர் வெளிநாட்டு ஏஜன்சிகளிடம் கேட்டுள்ளார். (ம)

## துப்பாக்கியால் சுட்டுக் கொன்று கொள்ளை

(கொழும்பு)

10 ஆயிரம் ரூபாவுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ப. நோ. கூ. ச. கிளை முகாமையாளர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்து அவரிடமிருந்த பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மதுருகிரியவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கமகேடக்ளஸ் என்ற அந்த முகாமையாளர் ஸ்தலத்திலேயே மரணமானார். (இ)

## வேலை நிறுத்தம் முடிந்தது

[கொழும்பு]

இலங்கை புகையிலைக் கம்பெனி ஊழியர்களின் 'வேலை நிறுத்தம் நேற்று முடிவடைந்தது. இன்றுஅவர்கள் வேலைக்குத் திரும்புவார்கள்.

சுதந்திர வர்த்தக வலயம்:

## வெளிநாட்டு தனியார் முதலீடுசெய்ய விருப்பம்

(கொழும்பு)

இலங்கையில் அமைக்கப்பட்டிருக்கும் சுதந்திர வர்த்தக வலயத்தில் தாய்லாந்து, ஹொங்கொங் ஆகிய நாடுகளில் உள்ள தனியார்துறை நிறுவனங்கள் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன.

இத்தகவலை நேற்று நாடு திரும்பிய வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

சீன, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு நேற்று நாடு திரும்பிய பின்னரே திரு. அத்துலத் முதலி இத்தகவலை வெளியிட்டார்.

உத்தேச வர்த்தக வலயத்தின் முதலீட்டு நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொருட்டு இந்த இரு நாடுகளிலும் வர்த்தக சம்மேளனக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (இ)

# வெங்காயம் இறக்குமதி செய்யப்படும்!

கொழும்பு

இந்தியாவிலிருந்து ஆயிரம் தொன் வெங்காயம் இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நாட்டில் வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்கவே அரசாங்கம் இந்த முடிவை செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இம் மாதம் 500 தொன் வெங்காயமும் மிகுதி 500 தொன் வெங்காயம் டிசம்பரிலும் இறக்குமதி செய்யப்படும்.

## மீண்டும் ''உத்தரதேவி'' ரயில் சேவை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட கலவரத்தையொட்டி நிறுத்தப்பட்டிருந்த ''உத்தரதேவி.' நாளை முதல் சேவையில் ஈடுபடும்,

நாளைக்காலை 11.55 மணிக்கு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து உத்தரதேவி புறப்பட்டு காங்கேசன்துறையை வந்தடையும். நாளை மறுதினம் காலை 11-55 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடையும்.

இச்சேவைகள் தொடர்ந்து வழமைபோல் நடைபெறும். (ம-க)

வெளிநாடு சென்ற

## டாக்டர்களை திருப்பி அழைக்க அரசு முடிவு

(கொழும்பு)

வெளிநாடு சென்று அங்கு வேலைபார்க்கும் டாக்டர்கள் பொறியியலாளர்களை அரசு திருப்பி அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது

இவர்களுக்கு பலவிதமான சலுகைகளை வழங்க அரசு முன்வந்துள்ளது.

இவர்களது குழந்தைகள், வெளிநாட்டில் ஆங்கிலமொழி மூலமே கல்விகற்றுள்ளதால் இங்கும் அக்குழந்தைகள் ஆங்கில மொழிமூலம் கல்விகற்க கல்வி அமைச்சு ஒழுங்குசெய்துள்ளது. அதேசமயம் இக்குழந்தைகளுக்கு சுயபாஷை மூலம் பயிற்சியளிக்கப்படும்.

இரண்டுவருட காலம் இக்குழந்தைகள் தொடர்ந்து ஆங்கிலமொழிமூலம் கல்விகற்க ஏற்பாடு செய்துள்ளது. இதற்காக கொழும்பில் நான்கு பாடசாலைகளை கல்வி அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும், பம்பலப்பிட்டி சென் கிளேயர் கல்லூரியிலும், வெளிநாட்டிலிருந்துவரும் தமிழ்க் குழந்தைகள் ஆங்கிலக் கல்வியைத் தொடர்ந்து படிப்பார்கள்.

டி. எஸ். சேனநாயக்கா வித்தியாசாலையிலும், வின்டன்சே கல்லூரியிலும் வெளிநாட்டிலிருந்துவரும் சிங்களக் குழந்தைகள் ஆங்கிலக்கல்வியைத் தொடர்ந்து கற்பார்கள்,

இக்குழந்தைகள் 2 வருடத்திற்கு மட்டுமே ஆங்கிலமொழி மூலம் கல்விகற்பார்கள். அதன் பின் சுயபாஷை மூலம் கல்வி கற்க ஏற்பாடு செய்யப்படும். (ம)

## பொதுமக்கள் குழு நியமிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவங்கள் பற்றியும், அண்மையில் இடம் பெற்ற இனக் கலவரங்கள் குறித்தும் விசாரணைகள் நடத்த பொதுமக்கள் குழுவொன்றை ஐ. நா. வின் மனித உரிமைத் தினமான டிசம்பர் 10-ம் திகதி நியமிக்க வேண்டும் என்று தமிழ் பிரமுகர்களை தமிழ் இளைஞர் பேரவைப் பிரமுகர் வண்ணை ஆனந்தன் கோரியுள்ளார்.

வண்ணை ஆனந்தன் இது சம்பந்தமாக விடுத்துள்ள ஒரு அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பது, 'அரசு பல மாதங்களுக்கு முன்னர் விசாரணைக் கமிஷன் ஒன்றைநியமிக்க விருப்பதாக அறிக்கை விட்டிருந்தும், இன்றுவரை அக் கமிஷன் நியமிக்கப்படவில்லை. முன்னைய அரசாங்கமும் இதே நிலையைப் பின்பற்றி தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவங்களை தட்டிக்கழித்தது. அதேபோல் இவ்வரசாங்கமும் நடந்து கொள்வதால், விசாரணைக்குழுநியமிக்கப்படாதபட்சத்தில் தமிழ் மக்கள் சுயேச்சையாக ஒரு குழுவை நியமித்து பகிரங்க விசாரணையை நடாத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார். (செ)

சுங்க ஏலவிற்பனை

1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் திகதி (1977-11-11) பிற்பகல் 2-00மணியளவில் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் கீழ் விபரிக்கப்பட்ட பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954-ம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதியிடப்பட்ட 10675-ம் இலக்க வர்த்தமானியில் பாகம் I பிரிவு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(1) 13 பொதிகள் கராம்பு-நிறை 768 ரூத்தல்.

எஸ். எம். ஜே. சேனரத்ன
உதவி சுங்க சேகரிப்பாளர்
யாழ். மாவட்டம்.

சுங்க அலுவலகம்
யாழ்ப்பாணம்.
8-11-77. 7625

## காரைநகர் வடக்கு இராமப்பிரதேசம்

# வழங்குநர்களைப் பதிவுசெய்தல் 1978—79

பின்வரும் விடயங்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு இம்மன்றத்தோடு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள் ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக்கொண்டுள்ள காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1978—79'' எனக் குறிப்பிட்டு, 1977 நவம்பர் 25-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கும்படியாக பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விடயமும் வழங்குவதற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு ஒரு உறையில் வைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### விடயங்கள்

1. எழுது கருவி வகை
2. அலுவலக உபகரணங்கள்
3. தளபாடங்கள், வாகன உரிமைத்தகடுகள்
4. கோலவுடைகளும், கோல வுடைகளுக்கான பொருட்களும்
5. அச்சிடுதல் வாசிகசாலைக்கான புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள்
6. சேவையிணைப்புகள், விநியோகக் கம்பிகள், தெருவிளக்கேற்றல் முதலியவற்றுக்கான மின்பொருட்கள் ஏற்றி இறக்கல்
7. மலகூட, தோட்டிவேலைகளஞ்சியப் பொருட்கள்-மலகூட வாளிகள், தும்புத்தடிகள், சக்குக் கட்டுகள், கிருமிநாசினிகள், கைக்கரத்தைகள் முதலியன
8. மருந்துப் பொருட்கள்
9. பாடசாலைப் புத்தகங்கள்
10. கட்டிடப் பொருட்கள், தண்ணீர் வழங்கலுக்கான பொருட்கள்
11. றோட் வேலைப் பொருட்கள்-கல், மணல், கிரவல், மரங்கள், பலகைகள் முதலியன

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்தே வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படுமென்னினும் அவசியமாகக் காணப்படும் பட்சத்தில் வேறு வழங்குநர்களிடமிருந்தும் விலைகள் கோரி கொள்வனவு செய்யும் உரிமை விசேட ஆணையாளருக்குண்டு. வேண்டப்படும்போது விலைகளைச் சமர்ப்பிக்க அல்லது கொள்வனவு ஆணைகள் விடுக்கப்படும்போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விவரக்கூற்றுகளுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாகவிருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகளை அறிவித்தல் இல்லாது பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்யும் உரிமை விசேட ஆணையாளருக்குண்டு.

ஏற்கனவே தவறிழைத்த ஒப்பந்தகாரர்கள், வழங்குநர்கள் ஆகியோரிடமிருந்து எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

ஒப்பம்
என். சண்முகசுந்தரம்;
விசேட ஆணையாளர்,
கிராமப்பிரதேச அலுவலகம்,
காரைநகர் வடக்கு,
7621 காரைநகர்.

## இன்று லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் வருஷப்புலம் மகாமாரி அம்பாளுக்கு இன்று லட்சார்ச்சனை நடைபெறுகிறது. பிரதிஷ்டா சிரோமணி நவாலி சுவாமி விஸ்வநாதக்குருக்கள் தலைமையில் 50 க்கும் அதிகமான குருக்கள்மார் அர்ச்சனை நிகழ்த்துவர். அதிகாலை தொடங்கி நள்ளிரவுடன் அர்ச்சனை நிறைவு பெறும். (அ)

சு. செ. மகாதேவா
சட்டத்தரணி
யாழ்ப்பாணம்.

நீதிநிருவாகச் சட்டம்
இல. 44/1973
283-ம் பிரிவின் கீழ் கடைசி விருப்பம் திருபிக்கப்பட்டு புரேபேற் பத்திரம் வழங்கப் படுவதற்கான

### இடைக்காலக் கட்டளை

யாழ்ப்பாணம் கடற்கரை வீதி 466 ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற வில்லியம் மேதர் அவர்களின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்

காலஞ்சென்றவர்

1. செல்லராஜ் ரேட்ணனந்தனும் பெண்
2. பிறிம்றேஸ் தயாளினி ரட்ணனந்தனும் பொஸ்வல் பிளேஸ், கொழும்பு தற்போது லிவிங்ஸ்ரோன் ஸாம்பியா தங்கள் அற்றேணித்தத்துவகாரர் கதிரவேலு இரத்தினனந்தன் ஏ/1 பொஸ்வல் பிளேஸ் கொழும்பு 6 மூலமாக.

மனுதாரர்கள்

இல: 392
எதிராக

1. பிறசாந்தி செல்வராணி மேதர்.
2. அல்பறட், ஷிரான் மேதர் இருவரும் 466 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் தற்போது லிவிங்ஸ்ரோன் ஸாம்பியா தங்கள் பாதுகாவலர்.
3. எட்வின் இரத்தினம் யோசேப் றக்கா றோட் சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், மூலமாக.

எதிர்வாதிகள்

280-ம் பிரிவின் கீழ் செய்யப்பட்டதும் 3-8-1977 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்தில் உள்ள முக்கிய கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில்நிரூபிக்கப்பட்டுள்ளதெனத்திருப்தி அடைந்ததன்மேல் 1977-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 13-ம் திகதிக்கு முன்னதாக போதிய எதிர்க்காரணம் காட்டப்பட்டாலன்றி:-

(அ) 25-2-76ல் 5761ம் இலக்கத்தில் நொத்தாரிஸ் சு. செ. மகாதேவா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் மூலப்பிரதி அவ்வலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதுமான மரணசாதனம் இத்தால் நிருபிக்கப்பட்டுள்ளதென்றும் அந்த மரணசாதனத்தில் சொல்லப்பட்ட நிறைவேற்றுனர் விண்ணப்பக்காரர். என்ற முறையில் மரணசாதனத்தின் புரேபேற் தத்துவம் விண்ணப்பகாரருக்குக் கொடுக்கப்படல் வேண்டுமெனவும்

(ஆ) மேற்சொல்லப்பட்ட 3-ல் எதிர்வாதி பராயமற்ற 1-ம் 2-ம் எதிர்வாதிகளின் பாதுகாவலராக நியமிக்கப்பட வேண்டுமெனவும்

யாழ்ப்பாணம் நீதிநிருவாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளையாகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ம் திகதி.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி.

13-10 77.

காரணம் காட்டுவதற்கான திகதி 15-11-1977 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை.
தத்துவப்பத்திர அதிகாரி.
7622

## வாள் வெட்டு: ஒருவர் படுகாயம்

(வவனியா)
வவனியா பண்டாரி குளம் என்ற இடத்தில் நடைபெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் தியாகராசா என்பவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பி.வெள்ளைச்சாமி என்பவர் சந்தேகத்தின் பேரில் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

வவனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். விமலசேன தொடர்ந்து விசாரணை நடத்துகிறார். [உ]

1973-ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 283-ம் பிரிவின் கீழ் மரணச் சொத்து நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்குவதற்கான

### இடைக்காலக் கட்டளை

#### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

நாவற்குளி, கைதடியைச் சேர்ந்த வெள்ளையப்பா கந்தையா என்பவரின் மரணச் சாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயத்தில்-

வலயம்: யாழ்ப்பாணம்
இல. 406.

இராசம்மா கைம்பெண் கந்தையா, பள்ளிக்கூட ஒழுங்கை, நாவற்குளி, கைதடி.

விண்ணப்பகாரி

மற்றும்

1. கந்தையா மகேஸ்வரன்
2. கந்தையா உமாபதி, இருவரும் பள்ளிக்கூட ஒழுங்கை, நாவற்குளி, கைதடி.

1-வது, 2-வது பிரதிவாதிகள் பராயமற்ற அவர்களின் பாதுகாவலர் 3-வது பிரதிவாதி கந்தர் மாரிமுத்து மூலம் தோற்றுகின்றனர்கள்.

3. கந்தர் மாரிமுத்து, பள்ளிக்கூட ஒழுங்கை, நாவற்குளி, கைதடி.

பிரதிவாதிகள்

281-ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும், 4-10-77ம் திகதியிடப்பட்டதும் ஆன விண்ணப்பத்தில் இருக்கும் கூற்றை பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதென திருப்தியடைந்ததன் பேரில் தற்போது நீடிக்கப்பட்டுள்ள 16-11-77 ந் திகதி அல்லது அதற்கு முன்னதாக எவராவது எதிர் காரணம் காட்டினாலன்றி மேற்சொல்லப்பட்ட விண்ணப்பகாரி காலஞ்சென்றவரின் மனைவி என்ற முறையில் காலஞ்சென்றவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்குரிய உரிமைத் தத்துவப் பத்திரங்களை பெறுவதற்கு உரிமை உடையவரென்றும், 3-வது பிரதிவாதி 1-வது, 2-வது பிரதிவாதிகளின் வழக்குப் பாதுகாவலர் ஆக நியமிக்கப்பட வேண்டும் என்றும், யாழ்ப்பாண நீதிநிருவாக வலயத்தின் தத்துவப் பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4-ந் திகதி.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி
7620

## தனங்கிளப்பு வரை பஸ்சேவை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
அலுவலக மற்றும் பாடசாலைப் பயணிகளுக்காகத் தினமும் காலை 7-30 மணிக்குத் தச்சன்தோப்பில் இருந்துபுறப்படும் விசேஷ பஸ் சேவையைக் கோவிலாக்கண்டி, கைதடி நாவற்குளி, மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய கிராமங்களில்உள்ள அலுவலக பாடசாலைப் பயணிகளின் நன்மை கருதித் தனங்கிளப்புவரை வரை நீடிக்குமாறு பயணிகள் சார்பில்விடுத்த கோரிக்கையை இ. போ. சபை யாழ் டிப்போ ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தபஸ் பத்துநிமிடம் முன்னதாகவே புறப்பட்டுத் தனங்கிளப்பு வந்து, 7-20க்குத் தனங்கிளப்பில் இருந்தும் 7-35க்கு வழமைபோல் தச்சன் தோப்பில் இருந்தும்புறப்பட ஒழுங்குசெய்ய இ. போ. ச நிர்வாகத்தினர் ஒப்புக்கொண்டுள்ளனர். இச்சேவையின் மூலம் பல பாடசாலை, அலுவலகப் பயணிகள் நன்மை அடைவர். இப் பயணிகள் சார்பில் மறவன்புலோவைச் சேர்ந்த க. சச்சிதானந்தன் இ. போ. ச டிப்போ சுப்பிரின்டன் திரு. தியாகராஜாவைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்திருந்தார்.

## கந்தரலங்கார உரை நூல் வெளியீடு

(சுழிபுரம்)
''நேரம் இல்லையே என்று கூறும் ஒருவன் மிகவும் சுலமாக அறியக்கூடிய வகையில் பயனுள்ள நூல்களை வெளியிடுவது மிகவும் பொருத்தமாகும். அந்த வகையில் தான் இன்று ஆசிரியர் சி மருதபிள்ளையினல் எழுதிவெளியிடப்பட்டுள்ள கந்தரலங்கார பொருள் நூல் அமைந்துள்ளது. உரைநூல் என்று கூறுவதிலும் பார்க்க பொருள் நூல் என்று இதனை குறிப்பிடல் மிகவும் பொருத்தமாகும்'' என்று வட்டூர் சி. மருதபிள்ளை எழுதிய கந்தரலங்காரப்பொருள் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்துப்பேசிய சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

விழாவிற்கு வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணசலம் தலைமைவகித்தார்.

சமூகத்தொண்டன் க. வைரவநாதன் மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

பிரமஸ்ரீ சி. பாலசுப்பிரமணிஐயர் ஆசிரியர்கேஜ நடராசா ஆசிரியர் எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

## சைவசமயப் பரீட்சை

(மாவிட்டபுரம்)
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் ஆதரவில் மாணவர்களிடையே சமய அறிவை வளர்க்கும் நோக்கமாக இம்மாதம் 20ம் திகதி சைவசமய பாடப்பரீட்சை யொன்று நடைபெறஉள்ளது. இரண்டு பிரிவாக நடைபெறும் இப்பரீட்சையில் காங்கேசன்துறை கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலைகள் பங்குபற்றுகின்றன. இப்பரீட்சைகளில் முதலாவதாக வருபவர்களுக்குதங்கப்பதக்கங்களும் இரண்டாவதாக வருபவர்களுக்கு வெள்ளிப்பதக்கமும் வேறு புத்தகப் பரிசில்களும் வழங்கப்படஉள்ளன.

சங்கப் போஷகரான சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மேற்பார்வையில் இப்பரீட்சை நடைபெற உள்ளது. (அ)


## வரிவிளம்பரம்

### தேவை

நல்ல நிலைமையில் இருக்கும் தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரம் சகல விலை விபரங்களுடன் அனுப்பிவைக்கவும். செயலாளர், இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளனம், 108/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 7628

### விற்பனைக்கு

முட்டையிடும் பருவ றோவயிட் (Row white) கன்னிக்கோழிகள். தையூப், 73, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 7616

### வகுப்புகள்

A/L 78க்கான மீட்டல்வகுப்புகள், தாவரவியல், இரசாயனவியல் பாடங்களில் 10ம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கின்றன. விபரங்களுக்கு நேரில். இ. இரத்னகோபால், இலக்கம் 77, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 7614

### பிறந்த தின வாழ்த்து



செல்வி ரஜிதா

வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பிரதமகுரு கணபதிசாமிக் குருக்களின் பேத்தியும் சண்முகரத்தினசர்மா கணேஸ்வரி தம்பதிகளின் புதல்வி ரஜிதா அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை 9-11-77 புதன்கிழமை பெருமாக்கடவை, அளவெட்டியில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, மற்றும் உறவினர்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழிவாழ வேண்டுமென வாழ்த்துகிறார்கள். 7574

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### 1978 London Examinations

1. City & Guilds Electrical Technician Course.
2. A. M. I. M. I. Inter & Final

By Experienced Engineers
Contact 59 St. Patricks Road. 7618

### Patrician Institute of Higher Studies

59, St. Patrick's Road, Jaffna.
Evening & Weekend Classes for G. C. E (A/L) 1978
Limited Vacancies, apply before 12-11-77 to Registrar
7619

# அடுத்த ஆண்டிலும் எண்ணெய் விலை அதிகரிக்கப்படும்

## 'ஒப்பெக்' நாடுகள் வியன்னாவில் ஆலோசனை

வியன்னா, நவ. 8

எண்ணெயின் விலை அடுத்த ஆண்டில் மீண்டும் அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெய் உற்பத்தி ஏற்றுமதி நாடுகளில் அநேகமானவை எண்ணெய் விலையை அடுத்த வருடம் அதிகரிக்கவேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளன.

'ஒப்பெக்' நிறுவன நாடுகளின் பிரதிநிதிகள் இப்போது வியன்னாவில் கூடி இவ்விலை அதிகரிப்பு குறித்து ஆலோசித்து வருகின்றனர்.

### இறுதி முடிவு

அடுத்தமாதம் 20ம் திகதி வெனிசூலாவில் கூடும் எண்ணெய் வர்த்தக அமைச்சர்கள் விலை அதிகரிப்பு பற்றிய இறுதி முடிவை மேற்கொள்வர். [இ]

## காங்கிரஸிலிருந்து இந்திரா வெளியேற்றப்படார்

### தலைவர் ரெட்டி உறுதி

பம்பாய், நவ. 8

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி எக்காரணம் கொண்டும் இந்திய காங்கிரஸிருந்து வெளியேற்றப் படமாட்டார்.

காங்கிரஸ் தலைவர் திரு. பிரம்மானந்தரெட்டி நேற்றுப் பத்திரிகை நிருபர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருமதி காந்தியை காங்கிரஸிலிருந்து வெளியேற்றுவதற்கு கட்சிக்குள்ளேயே முயற்சிகள் நடைபெற்றுவருவதாக எழுந்துள்ள வதந்திகளுக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே திரு. ரெட்டி மேற்கண்டவாறு கூறினார்.

கட்சிக்குள் ஒற்றுமை பாதுகாக்கப்படும் அதேவேளையில், கட்சியின் ஒழுங்கும் கட்டுப்பாடும் மீறப்படாமல் கண்காணிக்கப்படும் என்றும் திரு. ரெட்டி கூறினார். (இ)

## பாபுவின் குடும்பத்திற்கும் ரூ. 5 ஆயிரம்

(சென்னை)

சென்னையில் திருமதி இந்திராவுக்கு எதிரான கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தின்போது இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் காலமான திருவல்லிக்கேணியைச் சேர்ந்த திரு பாபு என்பவரின் குடும்பத்திற்கும் தமிழக முதல்வர் நிதியிலிருந்து 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

## ரூ. 1 லட்சம் நிவாரண நிதி!

புதுடில்லி, நவ. 8

ஜொர்ஹாட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விமான விமான விபத்தில் கொல்லப்பட்ட விமானிகளின்குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபா வழங்குவதென்று அரசு தீர்மானித்துள்ளது.

இதுபோன்ற விபத்துக்களுக்கு 42 ஆயிரம் ரூபாவே நிவாரணநிதி வழங்கப்பட்டு வந்தபோதிலும் இவ்விபத்து நிவாரணநிதி மட்டும் ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் எயர் மார்ஷல் திரு சுப்பையா தலைமையில் நேற்று இவ்விபத்து தொடர்பான விசாரணைகள் ஸ்தலத்தில் ஆரம்பமாயின. (இ)

## தி. மு. க. மீதான சதிக் குற்றச்சாட்டு:

### அரசு தரப்பில் விளக்கம்; நீதிமன்றத்தில் அறிக்கை

சென்னை, நவ. 8

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பதவியிலிருந்தபோது தமிழ்நாட்டில் திரு மு. கருணாநிதியின் அரசை பதவி நீக்கம் செய்ததுடன் தி மு. க தலைவர்கள் பலரை சிறைவைத்ததும் திரு. கருணாநிதிக்கும் அவரது சக அமைச்சர்களுக்கும் எதிராக சர்க்காரியா கமிஷனை நியமித்து விசாரணை செய்ததுமே தி.மு.க. வினர் மேற்கொண்ட சதிக்குக் காரணமாகும்.

இவ்வாறு திரு. கருணாநிதிக்கும் மற்றும் 28 தி.மு.க. தொண்டர்களுக்கும் எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்குற்றப்பத்திரிகையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

திருமதி காந்தி தமிழ் நாட்டுக்கு வந்திருந்தபோது கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் என்ற போர்வையில் தமது கட்சியினரையும் பயங்கர கட்டுக்கடங்காத சமூக விரோதச் சக்திகளையும் ஒன்றிணைத்து தி.மு.க.வினர் வன் முறைச் சம்பவத்தில் ஈடுபட்டனர்.

காரில் பயணம் செய்த திருமதி காந்தியை அவர்கள் பயங்கர ஆயுதங்களாலும், கற்கள், தடிகளாலும் தாக்கி கொலைசெய்ய முயன்றனர்.

இக் கொலைச்சதியை நிறைவேற்ற மதுரையில் பொன். முத்துராமலிங்கம், தென்னரசு மலைக்கண்ணன், பழக்கடை பாண்டி ஆகியோர் உட்பட பலர் தமது சாட்சிக்காரரையும் கலகக் கும்பலையும் கூட்டமாகத் திரட்டிக்கொண்டு பயங்கரமான ஆயுதங்களோடு சென்று காரில் சென்றுகொண்டிருந்த காந்தியை தாக்கினார்கள்.

திருமதி காந்தி காருக்குள் பதுங்கிக் கொண்டதாலும் சுற்றி இருந்தவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு பாதுகாத்ததாலும் அவர் மரணத்திலிருந்து தப்பினார்.

அத்தாக்குதல்கள் அவர்மீது பட்டிருந்தால் அவர் உயிர் துறந்திருப்பார்.

அவரைத்தாக்கிய கூட்டத்தினர் பின்னர் பொலிசாரைத் தாக்கி, தனியார், பொதுச் சொத்துகளை சேதப்படுத்தினர்.

இதை அடுத்து பிரயோகிக்கப்பட்ட கண்ணீர்ப்புகை தடியடி ஆகியன கூட பயனற்றுப் போயின.

சொத்து சேதத்தையும் உயிரிழப்பையும் தடுக்கவே பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். [இ]

ஆசிரியருக்குக் கடிதம்:

## இந்துமதமும் ஜனநாயகமும் இரண்டறக் கலந்தவை

இந்து சமயமும், ஜனநாயகமும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. ஜனநாயக ஆட்சியிலே இச்சமயம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து, பரிணாம நிலையை அடைய வழியுண்டு. இதனாற் போலும் காந்திமகானும், ஜவஹர்லால்நேருவும், மற்றும் இந்திய மாமேதைகளும் கம்யூனிஸ ஆட்சிமுறைக்கு ஆதரவு அளித்ததாகத் தெரியவில்லை.

எனினும், கம்யூனிஸ தத்துவத்தை ஓர் கழிவுப் பொருளாகக் கருதிவிடக்கூடாது! அதிலும், சில உண்மைகளும், நன்மைகளும் உண்டு. குறிப்பாக அதிலுள்ள பொருளாதாரத் தத்துவமும், மற்றும் சில சமுதாயத்துக்கேற்ற முன்னேற்றக் கருத்துக்களும் வரவேற்கத் தக்கன. அவற்றை ஏற்றுக்கொள்வதில் யாதொரு பிழையுமில்லை.

ஆனல், பண்டுதொட்டு இன்றுவரை, அதாவது பாரம்பரியமாக ஜனநாயக ஆட்சிமுறையிலே வாழ்ந்து வந்த மக்களுக்கு சுதந்திர ஜனநாயகம் இரத்தத்திலே ஊறிக்கிடக்கின்றது.

மேலும், சமய அடிப்படையிலே ஜனநாயக ஆட்சிமுறை உருவாகியுள்ளது. இந்து சமயம் அன்பு, சத்தியம், அகிம்சை மற்றும் தர்மத்தையும் பிரதானமாகக் கடைப்பிடித்து வந்துள்ளது. ஒருவர், இன்னுமொருவரை இம்சிப்பதையே இந்து சமயம் வெறுக்கின்றது.

மற்றும், உலகாயதுபாணிக்கு அப்பாற்பட்ட உண்மைத் தத்துவக் கருத்துக்களையும் எடுத்து இயம்பியுள்ளது. ஒழுக்கத்திலேயும், மெய்யறிவிலேயும்நின்று, பரிணாம வளர்ச்சி பெற்று சச்சிதானந்த நிலையை யடைந்து பிறப்பு, இறப்பு இன்றி ஓர் உன்னதநிலையில் நிரந்தர மெய்யுணர்வுபெற்ற ஆனந்த நிலையிலே வாழ்தலே இந்து சமய நெறியாகும்.

கம்யூனிஸ தத்துவம், சமநிலையற்ற உலகாயத வாழ்க்கையினையேநிலையானது மேலானது என்று கருதி, உளவளர்ச்சியோடுகூடிய பண்பாட்டினைக் கைநெகிழவிடல் அல்லல் உருகவேண்டியிருக்கும். மேலும், தனி மனிதனின் பரிபூரண சுதந்திரத்தை அளிக்க வல்லது சித்தாந்தமேயாகும்! ஆதலினல், இந்தியாவோ, இலங்கையோ இப்பேர்ப்பட்ட சித்தாந்தத்தை வரவேற்கமாட்டாது என்பதை யாவரும் அறிவர்.

ஆதலால், இந்துசமய மேம்பாட்டுக்கும், ஜனநாயக ஆட்சியின் அமைப்புக்கும் நாங்கள் என்றென்றும் பாடுபட்டு வர வேண்டும்.

மூ. பரமநாதன்
காரைநகர்.

## வலைத்திருட்டு வழக்கு: எதிரிக்கு ஒத்திவைப்பு சிறை

(வேலணை)

ஊர்காவற்றுறையில் திருட்டுப்போன மீன்பிடி வலைகள் தொண்டமானாற்றில் வைத்து மீட்கப்பட்டன.

கரையூரைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் 3000 ரூபா பெறுமதி மிக்க வலைகளே திருடப்பட்டிருந்தன. ஊர்காவற்றுறைக் கடலில் இத்திருட்டு இடம் பெற்றிருந்தது.

தொண்டமானாற்றில் இவ்வலைகள் விற்கப்பட்டிருந்தனவாம்.

ஊர்காவற்றுறை பொலிஸ் சார்ஜன்ட் திரு எஸ். சண்முகராஜா வலைகளை மீட்டதுடன் சந்தேகத்தின்பேரில் சத்தியசீலன் என்பவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்.

ஊர்காவற்றுறை நீதிபதி திரு. வை. ஜெயசோதி முன்னிலையில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதனையடுத்து 5 வருட காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (உ)

## திருடப்பட்ட நீரிறைக்கும் இயந்திரம் மீட்பு: இருவர் கைது

(கொழும்பு)

தொடங்கொடை பொலிஸ் பகுதியில் இருந்து திருட்டுப் போன 6000 ரூபாபெறுமதி நீரிறைக்கும் இயந்திரம் ஒன்று பெல்மதுளையில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.

மத்துகம தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ்.எஸ்.நவரத்தினராஜா தமக்கு கிடைத்த தகவலையடுத்து இந்த இயந்திரத்தை மீட்டதுடன் இத்திருட்டு தொடர்பாக இருவரைக் கைதுசெய்தும் உள்ளார்.

தொடங்கொடை பொலிஸ் பகுதியிலுள்ள சென் ஜோர்ஜ் எஸ்டேட்டில் இருந்து இந்த இயந்திரம் இவ்வருடம் ஜூலை மாதம் 13-ம் திகதி திருட்டுப் போயிருந்தது.

பொலிஸ் புலன் விசாரணை தொடர்கிறது. (உ

## சமாதானத்தை பேணும் சந்தர்ப்பத்தை தவறவிடுவது மக்களுக்கு இழைக்கும் துரோகமாகும்

### சோவியத் ஜனாதிபதி பிரஷ்னேவ்

மாஸ்கோ, நவ. 8

"சமாதானத்தைப் பேணுவதற்கு இணக்க அமைதிப் போக்கு இன்று எமக்கு அரிய சந்தர்ப்பத்தைத் தருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விடுவது நாம் மக்களுக்கு இழைக்கும் மாபெரும் துரோகமாகும். இன்று சர்வதேச உறவுகள் நிர்ணயமான ஒரு கட்டத்தை அடைந்துள்ளன: நாடுகள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதா அல்லது யுத்த அபாயத்தை நோக்கிச் செல்லுவதா? இந்த இரண்டிலொன்றினை நிர்ணயிக்கும் பொறுப்பு எமது கையில் உள்ளது"

இவ்வாறு கிரெம்ளினில் நடைபெற்ற அக்டோபர் புரட்சி ஆண்டு விழாக்கூட்டத்தில் பேசுகையில் சோவியத் ஜனாதிபதி திரு. லியோகித் பிரெஷ்னேவ் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"உலகினை தனது ஆதிக்கத்துக்குட்படுத்தியுள்ள ஆயுதப் போட்டி தொடர்வதும், மேலும் அபாயகரமான வடிவங்களைப் பெற்று வருவதும் விசனிக்கத்தக்கதாகும். அழிவுகரமான புதிய ரக ஆயுதங்களை உற்பத்தி செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"சோவியத் யூனியன் தனது பாதுகாப்பு ஆற்றலைப் பேணுவதில் அக்கறை கொண்டுள்ள பொழுதிலும், இராணுவ ரீதியில் வேறெந்தநாட்டையும் விட மேலாதிக்கஞ் செலுத்தும் உத்தேசம் நமக்குக் கிடையாது. தற்போதுள்ள இராணுவபல சமநிலையை குழப்புவதற்கு நாம் விரும்பவில்லை. ஆயுதப்போட்டியை நிறுத்துவதும், இராணுவ மோதுதல்களைக் குறைப்பதுமே எமது நோக்கமாகும். அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதைத் தடைசெய்வது தொடர்பான ஒரு சர்வதேச உடன்படிக்கையில் எல்லா நாடுகளும் கைச்சாத்திடவேண்டும் என்ற ஒரு முக்கிய பிரேரணையை நாம் முன்வைத்துள்ளோம். அணு ஆற்றலை சமாதான தேவைகளுக்காகப் பயன்படுத்துவதன் அத்தியாவசியம் பற்றி சோவியத் யூனியன் மீண்டும்மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளது". (க)

## விசேட பூஜை

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் 76 வது பிறந்த தினத்தை ஒட்டி நேற்று கொக்குவில் பொற்பதி பிள்ளையார் கோவிலில் விசேட பூஜை நடைபெற்றது.

கொக்குவில் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி சார்பில் நடைபெற்ற இவ்விசேடபூஜையை அடுத்து பொற்பதி சிறுவர்பாடசாலைச் சிறுவர்களுக்கு சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. (இ)

## கடன்வசதி ஏற்பாடு

(மாவிட்டபுரம்)

பிராமண சமூகத்தவர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சி கருதி அவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டமொன்றை அமுல்செய்ய பிராமண சமாஜம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பிராமண இளைஞர் சமாஜம் என்ற பெயருடைய இச்சங்கத்தை அதன் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும் முகமாக பிராமண சமாஜம் என மாற்றியுள்ளதாக அதன் செயலாளர் சிவஸ்ரீ கு ஜெகதீஸ்வரக்குருக்கள் தெரிவித்தார். (அ)

# யாழ். வளாகம் விரைவில் பூரண பல்கலைக்கழகமாகும்

## பொய்ப்பிரசாரங்களுக்கு தலைவர் சாட்டை

''இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ். வளாகம் பற்றி அண்மைக் காலத்தில் பரப்பப்பட்ட தவறான கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கும்'' அதே வேளையில் இவ்வளாகத்தின் சிறப்புக்கள் பற்றி அதன் தலைவர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் இங்கு விபரமாகத் தெரிவித்துள்ளார்.

யாழ். வளாகம் திறக்கப்பட்டபோது அதன் அமைப்புப்பற்றியும், வருங்காலம் பற்றியும் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவின. ஆனால் இப்போது இன்றைய சூழலில் யாழ். வளாகத்தின் வளர்ச்சியிற் பலர் கவனஞ் செலுத்துகின்றனர். ஆயினும் சுயநலவாதிகளின் விருப்பு வெறுப்புக்களினாலும், சில தீய சக்திகளின் திட்டமிட்ட அழிவுப் போக்கினாலும் யாழ். வளாகம்பற்றிய தவறான எண்ணங்கள் பரப்பப்படுகின்றன. மற்ற வளாகங்களிலிருந்து யாழ். வளாகத்திற்குத் தமிழ் மாணவர்களை வரவேண்டாம் என்றும், யாழ். வளாகம் மற்றைய வளாகங்களிலும் பல வகையிற் பின்தங்கி இருக்கின்றது என்றும் பொய்ப்பிரசாரம் செய்யப்பட்டுவருகின்றது. ஒரு சில அரசியல்வாதிகளின் எடுபிடிகள் தமிழ் மாணவர் யாழ். வளாகத்திற்கு மாறிவருவதைத் தடை செய்கின்றனர். யாழ். வளாகத்திற்கு மாறிச் செல்வதற்கு விண்ணப்பிப்பவர்களை விண்ணப்பங்களை வாபஸ் பெறவேண்டும் என்றும், தாம் அதற்கு உதவி செய்வதாகவும் சுற்றறிக்கை வெளியிட்டிருப்பது அவர்களின் கோணல் மனப்பாங்கினையும் கோளாறுத்தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது.

இப்போது யாழ். வளாகத்தில் பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பது விஷமக் கூற்றாகும். மற்றைய வளாகங்களிலும் பார்க்க இவ்வளாகத்திற்குக் கடந்த இரு மாதங்களில் பல துறைகளுக்கும் பேராசிரியர்களும் சிரேஷ்ட விரிவுரையாளர்களும் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். இவ்வளாகத்திலுள்ள ஆசிரியர்களின் தரம் மற்றைய வளாக ஆசிரியர்களின் தரத்திற் குறைந்ததன்று. பல துறைகளில் ஏனைய வளாகங்களிலும் பார்க்கச் சிறந்த ஆசிரியர்கள் இங்கு கடமையாற்றுகின்றனர். எல்லாப் பாடங்களிலும் விசேட பயிற்சிக்கு வாய்ப்புண்டு. முதுமாணி



கலாநிதிப் பட்டங்கள் பெறுவதற்கு உரிய விரிவுரைகள் நடைபெற்று வருகின்றன. வேறு வளாகங்களில் பயிற்றப்படாத பாடங்களில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது நூல் நிலைய வசதி தேவைக்கு மேலதிகமாக உண்டு. ஆனால் நூல்நிலையத்தை மாணவர் பயன்படுத்துவதுதான் குறைவு பேராதனை வளாக நூல்நிலையத்திற்கு அடுத்தாற்போல் சிறந்த நூல்நிலையமாக விளங்கும் யாழ். வளாக நூல்நிலையம், வருங்காலத்தில் ஈழத்தின் தலைசிறந்த நூல்நிலையமாக விளங்குவதற்குரிய அறிகுறிகள் உண்டு.

இவ்வளாகத்தில் இப்போது இல்லாத சில துறைகளை அடுத்த ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பூரண பல்கலைக்கழகமாக இவ்வளாகம் விரைவில் விளங்குமென்ற நம்பிக்கை எமக்குண்டு.

### தமிழினத்தின் மானத்தை அவமதிக்கும் செயல்

எனவே நிறைய வாய்ப்பும் பல வசதிகளும் உள்ள யாழ். வளாகத்தில் படிக்கும் அதிர்ஷ்டத்தைப் பெறும் மாணவர்களை இங்கு வரவேண்டாமெனச் சில பெருந்தகைகளும், சுயநல விரும்பிகளும் கூறுவது மாணவர்களிடையே மனக் குழப்பத்தை ஏற்படுத்திப் பொதுமக்களிடம் யாழ். வளாகம் பற்றிய ஒரு தவறான அபிப்பிராயத்தை உண்டுபண்ணுவது தமிழினத்தின் மானத்தைப் பழிவாங்குவதாகும். இத்தகைய பொய்ப்பிரசாரங்களினால் மாணவர்களும் பெற்றோர்களும் ஏமாற்றப்படாமல் இருக்கவேண்டும் ''நல்லது செய்தல் அற்றீர் ஆயினும் நல்லது செய்தல் ஓம்புமின்'' என்பது சங்கத்துச் சான்றோன் வாக்கு.

## பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு நிதி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கான பிரஜைகள் குழுவின் நிதிக்கு பொதுமக்களிடமிருந்து இதுவரை ரூபா 188,083-73 சதம் கிடைத்துள்ளது. இந்நிதிக்கு பணம் செலுத்த விரும்புகிறவர்கள் இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை கணக்கு இல. 3840க்கு நேராகச் செலுத்தலாம்.

| | |
|---|---|
| ஏற்கனவே சேர்ந்த நிதி ரூபா | 175,184-47 |
| இலங்கை மெதடிஸ்த திருச்சபை | 5,000-00 |
| கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத ஞாதனவிநாயகர் சனசமூக நிலையம் | 420-00 |
| அராலி வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் | 50-00 |
| எஸ். ஞானப்பிரகாசம், ஞானம்ஸ் ஸ்ருடியோ | 100-00 |
| ரி. பேரின்பநாயகம், நீர்வேலி | 15-00 |
| வேலணை உதவி அரசாங்க அதிபர் ஊடாக | 68-00 |
| சங்கானை உதவி அரசாங்க அதிபர் ஊடாக | 75-00 |
| வட்டுக்கோட்டை தபால் அதிபர் ஊடாக | 100-00 |
| யாழ். வைரமாளிகை அதிபர் ஊழியர்கள் | 915-00 |
| யாழ். றிக்கோ ஹோட்டல் அதிபர் ஊழியர்கள் | 320-00 |
| புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயம் | 100-00 |
| தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி | 1717-90 |
| ஸ்கந்தவரோதயக் கல்லூரி | 174-00 |
| சுண்டிக்குளி பரி யோவான் கல்லூரி | 300-00 |
| வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் கனிஷ்ட வித்தியாலயம் | 170-00 |
| ஏழாலை மகாவித்தியாலயம் | 330-00 |
| கரவெட்டி ஸ்ரீ நாரத வித்தியாலயம் | 79-00 |
| க. சிவகுருநாதன் ஊடாக | 208-72 |
| அம்பன் அ. மி பாடசாலை | 15-00 |
| குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயம் | 240-00 |
| கட்டுவன்புலம் அ. த. மி. பாடசாலை | 200-00 |
| புலோலி கிழக்கு அ. த. க. பாடசாலை | 30-00 |
| கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலை | 35-00 |
| அளவெட்டி அருணோதயக் கல்லூரி | 667-00 |
| யாழ்ப்பாண மத்தியக் கல்லூரி | 470-00 |
| சுண்டிக்குளி சென். ஜோன். பொஸ்கோ றே. க. பாடசாலை | 190-00 |
| ஆனைப்பந்தி குருநாதசுவாமி வித்தியாலயம் | 30-00 |
| காங்கேசன்துறை மகாவித்தியாலயம் | 320-04 |
| திருநெல்வேலி இ. த. க. பாடசாலை | 100-00 |
| சரஸ்வதி மகாவித்தியாலயம், அராலி | 80-00 |
| வதிரி வடக்கு மெ. மி. பாடசாலை | 15-00 |
| வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி | 165-00 |
| நடேசு திருஞானசம்பந்தர் வித்தியாசாலை, சுன்னாகம் | 72-00 |
| மறவன்புலோ சகலகலை வித்தியாசாலை, சாவகச்சேரி | 40-00 |
| நயினாதீவு அன்பர்கள் | 87-60 |
| ரூபா | 188,083-73 |

## நியமனம்

(வேலணை)

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 1972ம் ஆண்டுக்குப்பின் நடைபெற்ற நிர்வாகம் பற்றிய தகவல் திரட்டி அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் திரு எம். நாகலிங்கம் நியமிக்கப் பட்டுள்ளார்.

இதுவிடயத்தில் பொதுமக்களின் உதவியும் கோரப்பட்டுள்ளது. ...... [உ]

## மீண்டும் வேலை

(சங்கானை)

கடந்த ஒருவருட காலமாக தற்காலிக வேலை நீக்கம்செய்யப்பட்டிருந்த சங்கானை பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்களான மாத்தறை ஆராய்ச்சி, பிரேமரத்ன ஆகிய இருவரும் மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். (உ)

[முத்துத்தம்பிப்பிள்ளை ஆங்கில—ஆங்கில—தமிழ் அகராதியின் ஆசிரியரும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உழைத்தவருமான முத்துத்தம்பிப்பிள்ளையின் 120-வது பிறந்ததினம் இன்றாகும் ]

## முத்துத்தம்பிப் புகழ்மாலை

புண்ணியமும் தண்ணருளும் போதமும் திருவுருவும்
நண்ணுமுத்துத் தம்பு புகழ் மாநிலத்தில் -எண்ணரிய
காலம நிலவுக என்றேத்திக் கண்ணியன் தன்
சீலத்தைப் போற்றல் சிறப்பு

செந்தமிழ் வாழி திருமுறை வாழிநல்
அந்தணர் வாழி அறம்வாழி-சந்ததமும்
அம்புலியோர் போற்றி செயும் ஆற்றலுறு நன்முத்துத்
தம்பி புகழ் வாழி தரை.

பல்கலை நூல் கற்றுணர்ந்த பண்டிதன் முத்துத்தம்பி
தொல்கலையாரா ய்ச்சியிற் றோய்ந்துபல-சொல்லரிய
செந்தமிழ்த் தொண்டினைச் செய்தனன் அன்னவன்போல்
இந்த இகத்திலுண்டோ கூறு.

—கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

## கருணையின் வடிவம் ஹட்சின் அம்மையார்

[காலமெல்லாம் பிறருக்காகவே வாழ்ந்துவரும் செல்வி எம். வி. ஹட்சின் அம்மையாரின் பொது வாழ்வின் பொன்விழா இன்று கொண்டாடப்படுகிறது.]

''கணுக்கால்வரை நீண்ட அங்கி, கருணைபொழியும்முகம், கனிவான கன்னித் தமிழ்ப் பேச்சு, மழலைச்சிரிப்பு, குறைவற்ற அன்பு, உதவிகள்செய்து சிவந்த கரங்கள், தெய்வபக்தியும் தியாகமும் நிறைந்த வாழ்க்கை. இவைதான் கிளிநொச்சி கருணா நிலையத்து செல்வி எம். வி. ஹட்சின் அம்மையாரின் தன்மைகள்.

ஐம்பது ஆண்டுகள் ஈழவள நாட்டிலே அரும்பெருஞ்சேவைகள் புரிந்தவர் இந்த அம்மையார். அவருக்குப் பொன்விழா எடுப்பது ஆண்டவன் பணியாகும்.

ஆதரவற்ற அனாதைப்பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் அடைக்கலம் அளிப்பவர் அம்மையார். ஏழைகளின்சிரிப்பில் இறைவனைக் காண்பவர். 27 ஆண்டுகள் கல்விப்பணி புரிந்தவர். கடந்த 23 ஆண்டுகளாக கருணா நிலையத்தில் கருணையின் உருவாக வாழ்ந்து வருகிறார். வாழ வழியற்றோருக்கு வாழ்வும் வழியும் காட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கிறார்.

செல்வி மியூறியல் வயலற் ஹட்சின் அம்மையார் 1897ம் ஆண்டில் இங்கிலாந்திலுள்ள வேல்ஸ் மாகாணத்தில் பிறந்தார் மூன்றுபெண் குழந்தைகளில் மூத்தவர் இவர். ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் எம். ஏ பட்டம் பெற்று, ஆசிரிய பயிற்சியும் பெற்றார். சி. எம். எஸ். மிஷனறியாக 1937ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ந் திகதி ஈழநாட்டிற்கு வந்தார்.

சில மாதங்கள் கொழும்புமகளிர் கல்லூரியில் ஆங்கிலஆசிரியையாகப் பணிபுரிந்தார். அந்நாட்களில் கொழும்பிலுள்ள யாழ்ப்பாணத்தவரின் நட்பைப் பெற்றார் யாழ்ப்பாணத்தில் சேவை செய்ய விரும்பினார். யாழ்ப்பாணம் செல்வதற்கு முன் தமிழ்கற்க விரும்பினார் தென்னிந்தியாவிற்குச் சென்று ஓராண்டிற்குள் தமிழில் நல்ல பாண்டித்தியம் பெற்றார்

தமிழ் நன்கு கற்றறிந்த அறிஞராக யாழ்ப்பாணம் வந்த இவர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் உயர்வகுப்புஆசிரியையாக நியமனம பெற்றார் இசை ஞானமும், இலக்கிய அறிவும் நிறைந்த அம்மையார் இலக்கிய நாடகங்களையும் சமய நாடகங்களையும் அரங்கேற்றி புகழ்பெற்றார் ஆங்கில நாடகங்களை மொழிபெயர்த்தார். அக் காலத்தில் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்று தமது தமிழ் அறிவை மேலும் விருத்தி செய்தார்

உடுவில் பெண்கள் ஆசிரிய கலாசாலையின் அதிபராக நியமனம் செய்யப்பெற்றார் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இணைக்கப்பட்டபொழுது நல்லூருக்கு மாற்றப்பட்டு நாடும் ஏடும் போற்ற நல்லூரியில் நற்பணி புரிந்தார்.

1946ம் ஆண்டு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கடமை பேற்றார். 10 ஆண்டுகள் பலரும் பாராட்டப்பணிபுரிந்தார். கோப்பாய் வாழ்க்கை அம்மையாரின் ஜீவியத்தின் திருப்புமுனையாக அமைந்துவிட்டது. பின்னல் கருணா நிலையத்தை நடாத்தவும், சேவைக்கென்று தமது வாழ்வை அர்ப்பணிக்கவும் அம்மையாரைத் தூண்டியது.

ஏழைகள் மீதும், பின்தங்கியவர்கள் மீதும் அம்மையாருக்கு இணையற்ற அன்பு. தம் சொந்தப் பணத்தையும், நேரத்தையும் செலவு செய்து ஏழைப் பிள்ளைகள் உயர்கல்வி பெறவும் உத்தியோகம் பார்க்கவும் உதவின.

1954 ஆம் ஆண்டு அதிபர் தொழிலிலிருந்துஇளைப்பாறிய அம்மையார் தன்பிறந்தநாடாகிய இங்கிலாந்துக்குச் செனறார் உற்றார் உறவினரும் உயர்ந்த வாழ்வும் அம்மையாரைக் கவரவில்லை. தூய ரம் தோய்ந்தமுகமும், கந்தல் உடையும் கொண்ட யாழ்ப்பாணத்துஏழைகளையும், அனாதைகளையும் மறக்கஅம்மையாரால்

(6-ம் பக்கம் பார்க்க)

14-11-77-ல்
குதூகல திறப்பு விழா
விவசாயிகளே!
◦◦ நாட்டிற்கு உணவளிப்பது உங்கள் கரம்!
◦◦ நல்ல விளைச்சலுக்குத் தேவையானது எங்கள் உரம்!
உங்களுக்குத் தேவையான சகலவித உரப்பசளை கிருமிநாசினி போன்றவற்றிற்கு:
எஸ். பி. சாமி அன் கோ
193, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்.

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
அன்னக்கிளி

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

நாகம்மாள்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி; ஞாயிறு பி. ப. 2-45
சந்திரபாபு
கவலை இல்லாத மனிதன்

சாந்தி [யாழ். நகர்]
எமது தீபாவளித் திரைவிருந்து!
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
இரசிகர்களின் அமோக ஆதரவைப்பெற்று 2-வது ஜனத்திரள்வாரமாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது
☆ திலிப்குமார் ☆ மதுபாலா ☆ பிருதிவிராஜ்கபூர்
அக்பர் (தமிழ்) - புதிய பிரதி
நடனங்கள் கலரில்

## ஆலயம் அமைப்பர்

(வவனியா)

வவனியாதோணிக்கல்என்ற இடத்தில் உள்ள லக்சபான வீதியில் முத்துமாரியம்மன் ஆலயம் ஒன்றை அமைக்கும் ஆரம்ப வேலைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

500 குடும்பங்கள் வாழ்கின்ற இந்த இடத்தில் இவ்வாலயத்தை அமைப்பதற்கான அடிக்கல்லை திரு. ஆ. தம்பி ராஜா நாட்டினார். இதன் பொருட்டு தோணிக்கல் முத்து மாரியம்மன் கோவில்சபையும் அமைக்கப்பட்டுள்ளது. (உ)

## தெல்லிப்பழையில் ஐ. நா தினம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் ஐ. நா. தினத்தைக் கொண்டாடியது. கழகத் தலைவர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் தலைமையில் மகாஜனக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் சட்டத்தரணி திரு. மு. திருநாவுக்கரசு சுகாதார வைத்திய அதிகாரி திரு. எஸ். புவிராஜசிங்கம் உட்படப் பலர் பேசினர் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ராணி (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா- யாழ்நகர்
ஐந்தாவது வெற்றி வாரம்!
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்]



RIO (Jaffna)
Now Showing
VATICAN JEWEL ROBBERY
From 10-11-77
தில்லகி (ஹிந்தி)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 காட்சி
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
DAYTON'S DEVILS
(Color-Action film)

மனோஹரா (யாழ். நகர்)
மகத்தான தீபாவளி வெளியீடு!
இன்று முதல்
காலை 6 மணிக்காட்சியுடன் ஆரம்பம்



★ நடிகர்திலகம் சிவாஜிகணேசன்
★ நடிப்புச் செல்வம் ஜெமினிகணேஷ்
★ லக்ஷ்மி ★ நிர்மலா
★ சுந்தரராஜன் ★ ராமதாஸ்
★ பாலாஜி ★ மனோகர்
★ மனோரமா ★ நாகேஷ்
★ சுப்பையா
நடிக்கும்
சுஜாதாவின்......
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன் சி. வி. ராஜேந்திரன்
சிறந்த கதை! பண்பட்ட நடிப்பு! இனிமையான பாடல்கள்!
சிந்தனைக்குகந்த கருத்துக்கள்!
சிவாஜி கணேசனும், ஜெமினி கணேசனும் இணைந்து நடித்து ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்று இந்தியாவில் வெற்றிமுழக்கமிட்ட படம்

## அறிவித்தல்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 10-11-77 வியாழக்கிழமை 'ஈழநாடு' ஊழியருக்கு விடுமுறையாதலால் 11-11-77, வெள்ளிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

அகத்திற் தூய்மையுடையோன்; புறத்தில் அசுத்தமாயிருக்கமாட்டான்.

—காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக ஒரு கோடி 90 லட்சம் ரூபாய்

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்ட 20 ஆயிரம் தமிழ்க் குடும்பங்களுக்கு ஒரு கோடி 90 லட்சம் ரூபா நிவாரணம் அளிக்க சமூக சேவைகள் அமைச்சு முன்வந்துள்ளது.

இவ்வருடம் இறுதிக்குள் இந்த நிவாரண நிதியை வழங்கிவிடுமாறு பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணாரத்னவைக் கேட்டுள்ளார்.

இந்நிவாரண நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கான உபமான்யப் பிரேரணை ஒன்றை திரு. கருணாரத்ன தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பித்துள்ளார். (இ)

## மறு பரிசீலனை-3

குடியரசு அரசியலமைப்பைத் தமிழர் விடுதலைக்கூட்டணி விரும்பாவிட்டாலும் அதைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று எடுத்துச் சொல்வதற்காகத் தானும் கூட்டணி எம். பி.க்கள் அரசியலமைப்புக்கு விசுவாசம் தெரிவிக்கவேண்டியிருந்தது.

குடியரசு அரசியலமைப்புக்கு விசுவாசம் தெரிவித்த பின்னர் விடுதலைக்கூட்டணி எம். பி க்கள் அதன்கீழ் இயங்கியே வருகின்றனர்.

சமீபத்திய கலவரங்களில் அகதிகளாக்கப்பட்டவர்களின் பிரச்னைகள்; அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது சம்பந்தமான கோரிக்கைகள் பற்றிப் பிரதம மந்திரியுடன் விடுதலைக் கூட்டணியினர் பேச்சுவார்த்தைகள் நடாத்துகின்றனர்.

கலவரத்தினால் இடம் பெயர்ந்த அரச ஊழியர்கள் பற்றியும் பிரதமருடனும் அமைச்சர்களுடனும் தான் கூட்டணியினர்பேச்சுவார்த்தைகள் நடாத்துகின்றனர்.

அமைச்சர்கள் தொகுதிகளுக்கு விஜயம்செய்யும் போதுகூட அவர்கள் கூட்டும் மகாநாடுகளில் கலந்து கொண்டு தொகுதிகளின் குறைகளை எடுத்துக்கூறி கூட்டணியினர் நிவாரணம் கோருகின்றனர். அமைச்சர்களைச் சந்தித்தும் தொகுதியின் குறைகளை எடுத்துக் கூறுகின்றனர்.

இவைகள் யாவும் அரசியல் அமைப்பின்கீழ் இயங்கும் செயல்களே!

இவையொன்றும் செய்யக் கூடாத செயல்களல்ல. செய்ய வேண்டியவைதான்!

இப்படி – அரசியலமைப்பின்கீழ் செயல்படும்போது அரசியலமைப்பில் திருத்தம் செய்வதற்காக நியமிக்கப் பட்டுள்ள தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கலந்துகொண்டு தமிழ் மக்களின் உரிமைகளை அரசியல் சட்ட ரீதியாகப் பெறக்கூடியவற்றைப் பெறுவதற்கு ஏன் முயற்சி செய்யக்கூடாது?

இதற்காகத் தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட வேண்டுமென்று அர்த்தமில்லையே!

தமிழர் பிரச்னைக்குத்தீர்வு காண்பதற்காக அரசாங்கமோ தெரிவுக்குழுவோ அரசியலமைப்பில் கொண்டு வரும் திருத்தங்களுக்குக் கூட்டணி முட்டுக்கட்டையாகஇருக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது 'நீங்களாக உருவாக்கிய பிரச்னைக்கு நீங்களே தீர்வுகாணுங்கள்' என்று பெரும்பான்மைக் கட்சிகளுக்குச் சொல்வது போன்ற அர்த்தம் இது!

ஆனாலும் அவர்களால் உருவாக்கப்பட்ட பிரச்னைகள் தமிழ்மக்களைப் பொறுத்ததென்பதால்தான் முன்னைய அரசுடன் பேச்சுவார்த்தைநடத்தக் கூட்டணி தயாராக இருந்தது; இறுதிக்கட்டத்தில் பேச்சுவார்த்தைகளிலும் கலந்துகொண்டது.

அரசியல் நிர்ணய சபையிலும் கலந்துகொண்டு பின்னர்பயனில்லையென்றுவெளியேறியது.

இப்போது புதிய அரசாங்கம் கூட்டணியை ஓர் இயக்கமாக அங்கீகரித்து கூட்டணி எம். பி.க்களைப் பிரதிநிதிகளாக மதித்து, தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரமான நியாயமான தீர்வுகாண்போம் வாருங்கள் என்று அழைப்புவிடுக்கின்றது.

முன்னைய அரசுபோல் தேர்தலை எதிர்நோக்கும் சமயத்தில் இந்த அழைப்பு விடுக்கப்படவில்லை.

தேர்தல் முடிந்து மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்துக்கு வந்த பின் விடுக்கப்படும் அழைப்பு முன்னைய அரசியலமைப்பில் பெருமாறுதல் செய்யப் பட்டபின் விடுக்கப்பட்டுள்ள அழைப்பு இது.

இந்தச் சந்தர்ப்பம்போல் இனியும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமென்று எதிர் பார்க்கமுடியாது. கூட்டணியில்லாமலே திருத்தம் கொண்டுவரப்படுமென்பதில் சந்தேகமில்லை.

'அப்படித் திருத்தம் வந்த பின் எங்களுக்குத் திருப்தியில்லை' என்று சொன்னால் 'அதற்காகத்தான் உங்களையும் அழைத்தோம், நீங்கள் வரவில்லை, நாங்கள் என்ன செய்வது?' என்று அரசு பதில் கூறலாம்.

இவற்றுக்கு இடமில்லாமல், சந்தர்ப்பத்தை இழக்காமல் கூட்டணியினர் தமதுமுடிவை மறுபரிசீலனை செய்து தெரிவுக்குழுவில் கலந்துகொள்வதே விவேகம். தெரிவுக் குழுவின் போக்குப் பிடிக்கவில்லையானால் வெளியேறுவதை யாரும் தடுக்கப் போவதில்லையே!

இவை பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி பரிசீலனை செய்து நல்லமுடிவு காண வேண்டுமென்று வேண்டுகிறோம்.

'ஊதுகிற சங்கை ஊதி வைக்கிறோம். விடிகிறநேரம் விடியட்டும்.'

## நோயாளர் அதிருப்தி

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பகுதியில் மருந்து எடுக்கச் செல்லும் நோயாளர் மருந்து பற்றி எழுதுவதற்கான காகிதத்துண்டு கொண்டுவரும்படி கேட்கப்படுகிறார்கள்.

இதனால் நோயாளிகள் காகிதத்துண்டு பெறுவதற்கு திரும்ப வெளியே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது நோயாளர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (உ)

## கருணையின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை.

1955ம் ஆண்டு கிளிநொச்சிக்கு வந்தார். பெற்றார், பாதுகாவலர் அற்றபிள்ளைகளையும், கைவிடப்பட்ட பெண்களையும் கருணை நிலையத்தில்சேர்த்தார். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி கற்பித்தார். பெண்களுக்குத் தும்புத் தொழிலும், தையல்தொழிலும் கற்பித்து அவர்கள் வாழவழிகாட்டினார். சாதி சமய பேதமற்ற சமூகத் தொண்டுகள் புரிந்தார்.

தன்னைநாடி வந்தவர்களுக்கு உணவும், உடையும், உறைவிடமும் கொடுத்தார். சமூகத்திலும், குடும்பத்திலும் பிரச்னையானவர்களைத் தமதுபோதனையாலும், சாதனையாலும் நல்லவர்களாக்கினார். சமயப்பற்றும் சமூகஉறவும் வளர வழிகாட்டினார்.

தமிழ்ப்பண்பாட்டில் ஊறி, தமிழ்ப்பற்றில் இணைந்து, சேவையால் இன்புற்று, இன்று 79 வயதை அடைந்து விட்டாலும் முதுமைகண்டுஅஞ்சாமல் அங்குமிங்கும் சைக்கிளில் ஓடிச் சமூகசேவை செய்கிறார். எளிய இனிய, பிழையற்ற முறையில் தமிழைப்பேசவும், எழுதவும் வாசிக்கவும் தகுதி பெற்ற தமிழ்ப்பாட்டி எங்கள் அம்மையார். கருணைநிலையத்தில் திராவிட சிற்பக் கட்டிடக் கலையில் அமைக்கப்பட்ட பரிசுத்த பவுல் ஆலயம் அம்மையாரின் தமிழ்ப்பற்றுக்குத் தனிச்சான்றாகும்.

ஈழநாட்டில் இந்த அமைப்பில் அமைக்கப்பட்டகிறிஸ்தவ கோவில் இது ஒன்றேயாகும்.

சிறுவர், பெண்கள், இவர்களோடு தற்பொழுது வன்செயலால் பாதிக்கப்பட்ட அகதிகளையும் அம்மையார் கருணை நிலையத்தில் வைத்திருக்கிறார். தமது ஓய்வு ஊதியத்தையும், தமது நண்பர்களின் உதவியையும் கொண்டு கருணை நிலையத்தைக் கடந்த 23 ஆண்டுகள் சீரும், சிறப்புமாக நடாத்திவருகிறார்.

தமிழ்நாட்டில்ஸ்ரீ ஆண்டாள் போன்று ஹட்சின் அம்மையாருக்கு இயேசு பெருமான் மேல் மாறாத அன்பு. அந்த வற்றாத அன்பு அம்மையாருக்கு வழிகாட்டுகிறது. வாழ்க ஹட்சின் அம்மையார். வளர்க கருணை நிலையப்பணிகள். ''தொண்டர் தம் பெருமை சொல்லவுங் கூடுமோ''

— கு-ரா

## மரண அறிவித்தல்

### நா. பொன்னம்பலம்

மறவன்புலோ, இளைப்பாறிய தலைமையாசிரியர் மாண்புமிகு நா. பொன்னம்பலம் காலமாகி விட்டார்கள். இவர் திருமதி தங்கம்மாவின் அருமைக் கணவரும், யாழ் வைத்தியக் கல்லூரி விரிவுரையாளர், வைத்திய கலாநிதி இராஜதுரை, திரு. கந்தையா ஆகியோரின் தமையனுமாவார். ஈமக்கிரியைகள் நவம்பர் 9, புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு மறவன்புலோ மயானத்தில் நடைபெறும்.

—வைத்தியகலாநிதி இராஜதுரை

7623

## பரியோவான் கல்லூரியில் இன்று

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியின் பீற்றோ ஞாபக மண்டபத்தில் இன்று தமிழ்த் தினவிழா நடைபெறுகிறது. திரு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் 'கம்பர் காவியப் பாத்திரங்களில் சிறப்புப் பெற்றது எது' என்ற பொருள் பற்றிய கருத்தரங்கு இடம் பெறும். இக்கருத்தரங்கில் பல மாணவ மாணவிகள் கலந்து கொள்வர்.

கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி இளைப்பாறிய திரு. கே. சுப்பிரமணியம்மேற்படி விழாவில் கௌரவிக்கப் படவிருக்கிறார், ஆசிரியரைக் கௌரவித்து திரு. ஜே. செந்தில்நாதன், கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா ஆகியோர் பேசுவர்.

பிரதம விருந்தினராக யாழ் வளாகப் பூமிசாத்திர பிரதம பேராசிரியர் திரு. சோமசுந்தரம் செல்வநாயகம் கலந்து கொள்கிறார். போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பேராசிரியர் பரிசில்கள் வழங்குவார். (அ)

## இரகசிய...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

"கூட்டத்தில் எனது மகன் சாண்டீபன் பற்றியோ இங்கு அவரை வரவழைப்பது பற்றியோ எதுவும் பேசப்படவில்லை. அதுபற்றி பிரஸ்தாபிக்கவுமில்லை.

"இப்பத்திரிகைச் செய்தி எனக்கும் கூட்டணியினருக்குமிடையே பிரிவினையை ஏற்படுத்த வேண்டும் என்றநோக்குடன் உண்மைக்குப் புறம்பாக வெளிவந்திருந்ததாகவே நான்கருதுகின்றேன்'' (ம)

(5ம் கலத் தொடர்ச்சி)

கையை-மனஉறுதியைக்கெடுத்துக்கொள்ளாதேயுங்கள்; முருகன் பெயரால் பிணியை ஓட்ட முயலுங்கள்; உறுதிக்கொள்கையை வளருங்கள்; நோன்பிருங்கள்; பெண்ணைப் போற்றி இல்லறம் நடத்துங்கள்; முருகன் திருவருளால் பிணி மூப்பு சாக்காடென்னும் கட்டுகளை அறுத்துக் கொள்ளுங்கள்; கொள்ளின் இயற்கைமணமும், மாறா இளமையும், அழியா அழகும், கடவுள் தன்மையும் உங்கள்பால் பொலியும்; பொலியும்.

இயற்கையும் அழகும் என்றும் வாழ்க!

ஃ ஃ ஃ

கோப்பாய் தபாற்கந்தோருக்குச் சமீபத்தில் ரொக்கப் பணம் கொஞ்சம் நேற்றுக் காலை கீழேகிடந்ததைக் கண்ட கோப்பாய் ஆசிரியபயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த திரு. பரமலிங்கம் என்பவர் கோப்பாய் தபால் அதிபரிடம் கொடுத்திருக்கிறாராம். பணத்தைத் தொலைத்தவர் தகுந்த அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

— ஊர்சுற்றி

## யாருடையது?

அரியாலையைச் சேர்ந்த ம. சுகுமார் என்ற மாணவரினால் யாழ். பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட திறப்புக் கோர்வை ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (ஆர்)

## தவறிவிட்டது

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் வந்து சேர்ந்த ரயிலில் பாஸ்போர்ட் மற்றும் முக்கிய தஸ்தாவேஜுகளைக்கொண்ட 'ஜேம்ஸ் பொண்ட் பேக்' (James Bond Bag) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ''விக்ரர் அன் சன்ஸ்'', இல. 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும்.

போன்: 7346. 7631

## நாடும் நடப்பும்

நாளை தீபாவளி. அன்பர்கள் எல்லோருக்கும் ஒரு நாள் முன்னதாகவே எனது வாழ்த்துக்கள்!

ஃ ஃ ஃ

கரவெட்டி நுகவில் என்னுமிடத்திலிருந்து கண. மகேஸ்வரன் என்னும் அன்பர்-

''வேண்டுமோ நமக்கினித் தீபாவளி......?''

என்ற தலைப்பில் எழுதியுள்ள கவிதையை இங்கு தருகிறேன்:-

''மாந்தரை அழித்து
தேவரை வதைத்து
மார்தட்டி நின்றனன்
அரக்கன்!
வேந்தனும் தானே
வீரனும் தானேயென
வெறியாட்டப் வேறு
போட்டனன்!
தான்பெற்ற வரத்தினை
தவறான வழியில்
சிதைப்பதில் இன்பம்
கண்டனன்!
ஈனனிவன் செய்கையை
தேவருரைத் திடக்கேட்ட
திருமாலும் வெகுண்
டெழுந்தனர்!
ஆண்டவன் கொண்ட
கோபம் — அன்றே
அழிந்தனன் நரகா
சுரனவன்!
மாண்ட அரக்கனை
நினைக்குந் தோறும்
மகிழ்ந்தனர் மக்கள்
புதிதுடுடி!
மீண்டுமிங் கோரகரர்
படை தோன்றி
எரித்தன ரழித்தன
ரீழந்தன்னை!
வேண்டுமோ நமக்கினித்
தீபாவளி — எனில்
அசுரர்கள் ஒழிய
வேண்டும்!''

ஃ ஃ ஃ

''திருவருள் பொழிக,
முருக!''

என்ற தலைப்பில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. என்ற தொண்டுப் பிரசுரமொன்று நேற்றைய தபாலில் கிடைத்தது. அதையும இங்கே வாசக நேயர்களுக்காகத் தருகிறேன்.

முருகா! நினது உண்மையை முதன்முதல் கண்டவர் தமிழரல்லரோ? தொன்மை வாய்ந்த மக்கள் தங்கள் நிலைதிரிந்து இடர்ப்படுகின்றனர்கள். இயற்கை வழி விடுத்து வேறு வேறு வழிகளில் புகுந்து புகுந்து வருந்துகிறார்கள். அவர்கள் மீது திருவருள் பொழிக, முருகா! நினக்குரிய நாட்டை, மக்களை, நின்னையன்றி எவரே காப்பர்? தமிழ் முருகா! முருகா! நண்ணினர்க்கினியாய்ஓலம்! தேவர்கள்தேவே ஓலம்!! என்று ஓலமிடுகிறேன். முருகா! நின் தமிழ் மக்களைக் காக்க!

தமிழ்மக்களே! முருகன் எல்லாப் பொருள்களிலும் நீக்க மற நின்று, அவைகளை அழகு செய்வதை உங்கள் முன்னோர்கள் கண்டு இன்பம் நுகர்ந்தார்களே. அவ்வின்பத்தை இப்போது நீங்கள் நுகருகிறீர்களா? இயற்கை, முருகன் வடிவாயிருப்பது உங்களுக்குப் புலனாகிறதா? முருகனைக் காண முயலுகிறீர்களா? அவன் செந்நெறியை ஓம்பினால் அவனைக் காணலாமன்றோ? முருகனுக்கு ஏராளமான கோவில்களிருக்கின்றன. அவனுக்கு இனிப் புதிய கோவில்கள் கட்டுதல் வேண்டா; எங்கும் நிறைந்துள்ள அவனுக்கு எக்கோவிலும் வேண்டா. அவன் செந்நெறியை வளர்க்கும் கழகங்கள் காணுங்கள்; கல்லூரி அமையுங்கள்; அறநிலையம் நிறுவுங்கள்; திருப்புகழைப் பொருளுணர்ந்து ஓதுங்கள்; இயற்கையிலுள்ள அழகை நூல்களாக எழுதுங்கள்; பாட்டாகப் பாடுங்கள்; போலி ஞானம் பேசி முருகனிடத்துள்ள அன்பை- நம்பிக்

(4-ம் கலம் பார்க்க)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் தாபனத்தாருக்காக யாழ்ப்பாணம் இலக்கம் 68-ம் இலக்க மேலவீதி சேர்ந்த ... இறுதியில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna: Telegram Eelnaadu Telephone 389, Registered as News paper in Sri Lanka: